அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS













# தமிழ் ஆண்டு 9

# செப்பனிடப்பட்ட வரலாற்றுப் பாடங்கள்









# தமிழ்

## ஆண்டு 9

## TAMIL YEAR 9



அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# 7 ஈழத்தமிழர் வரலாறு

தொன்மைக்காலத்திலிருந்து ஈழம் முழுவதும் பரந்தளவில் தமிழ் மன்னர்கள் ஆண்டு வந்தனர். அநுராதபுரம் நடுவண் அரசாக உருவாகிய பின்னரும் தமிழ் மன்னர்களின் ஆட்சி தொடர்ந்தது. கி.பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழகத்தில் அரசியல், பொருளாதாரம், பண்பாடு போன்றவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டன. இதனைத்தொடர்ந்து தென்னிந்திய அரச மரபினர் ஈழத்தின் மீது அடிக்கடி படையெடுத்தனர். இவர்களுள் சோழ மன்னர்கள் பொலநறுவையைத் தலைநகராகக்கொண்டு நீண்டகாலம் ஈழம் முழுவதையும் ஆளுகை செய்தனர். இதனைத்தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக்கொண்ட வலுவான தமிழரசு ஒன்று உருவாகியது. 1505இல் ஐரோப்பியரான போர்த்துக்கேயர் ஈழத்திற்கு வரும்போது தமிழர் தேசத்தில் யாழ்ப்பாணத் தமிழரசும் வன்னித் தமிழ்ச்சிற்றரசுகளும் சிங்கள தேசத்தில் கண்டி அரசும் கரையோரக் கோட்டை அரசும் ஆட்சிசெய்து வந்தன.

வணிகம், அரசியல் ஆளுமையைப் பெறுதல் மற்றும் மதங்களைப் பரப்புதல் ஆகிய நோக்கங்களுடன் ஐரோப்பிய நாட்டவர் கீழைத்தேய நாடுகளுக்கு வந்தனர். முதன்முதல் ஈழத்திலுள்ள காலித்துறைமுகத்தை வந்தடைந்த போர்த்துக்கேயர் தென்மேற்குப் பகுதியில் ஆளுகை செய்துகொண்டிருந்த கோட்டைச் சிங்கள மன்னனுடன் நல்லுறவை ஏற்படுத்தினர். இதன் மூலம் அவர்களின் அரசியல், பொருண்மிய, சமய, பண்பாட்டு மேலாண்மை ஈழத்தின் தென்மேற்குப் பகுதியில் ஏற்பட்டது. போர்த்துக்கேயர் யாழ்ப்பாண மன்னர்களுடனும் நல்லுறவைப் பேணி உடன்படிக்கைகளைச் செய்துகொண்டனர். ஆயினும், வணிக ஆளுமை, கத்தோலிக்க மதத்தைப் பரப்பும் நடவடிக்கைகள் என்பவற்றால் அவ்வுறவைத் தொடரமுடியவில்லை. இதனால், போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயன்றனர். போர்த்துக்கேயர் கோட்டை அரசை வெற்றிகொண்டதன் பின்னர், ஈழத்தின் கரையோரப் பகுதிகளைப் படிப்படியாகக் கைப்பற்றி, யாழ்ப்பாண அரசை 1619இல் கைப்பற்றினர்.

இவர்களின் ஆட்சியில் கத்தோலிக்க மதம் பரப்பப்பட்டது. இதனால், புதிய கத்தோலிக்க தமிழ்க் குமுகம் ஒன்று தோன்றியது. எனினும், வன்னி அரசினைப் போர்த்துக்கேயராலும் அவர்களுக்குப் பின் வந்த ஒல்லாந்தராலும் கைப்பற்றமுடியவில்லை. வன்னி அரசு ஐரோப்பியருக்கு அடங்காத தனியரசாக வீரம் செறிந்த ஆளுகையைக் கொண்டிருந்தது.

16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரைத் தொடர்ந்து ஒல்லாந்தரும் வணிக நடவடிக்கைகளுக்காகக் கீழைத்தேய நாடுகளுக்கு வந்தனர். கடற்படை வலிமை கொண்ட ஒல்லாந்தர் ஈழத்தின் கரையோரப் பகுதிகளை ஆளுகை செய்துகொண்டிருந்த போர்த்துக்கேயரைப் படிப்படியாக வெளியேற்றினர். இதனால், ஈழத்தின் கரையோரப் பகுதிகள் பலவும் ஒல்லாந்தரின் நேரடி ஆளுகைக்கு உட்பட்டன.

பொருளீட்டுவதை நோக்கமாகக் கொண்டிருந்த ஒல்லாந்தர் மென்போக்கான நிர்வாக முறையைக் கடைப்பிடித்தனர். தமது கட்டுப்பாட்டிலிருந்த தமிழீழப் பகுதிகளுக்கென வெளியிட்ட

நாணயங்களில் தமிழ்மொழியையும் சேர்த்தனர். தமது புரட்டத்தாந்து மதத்தையும் பரப்பினர். தமிழரிடையே இருந்து வந்த வழக்காறுகளைத் தேசவழமை எனத் தொகுத்து, அவற்றை உரோமன் டச்சுச் சட்டத்தின் ஒரு பகுதியாக இணைத்தனர்.

இக்காலத்தில் ஐரோப்பாவில் புதிய வல்லரசுகளாகப் பிரான்சும் பிரித்தானியாவும் எழுச்சி பெற்றன. அவை கீழைத்தேய நாடுகளில் தமது ஆளுகையை நிலைநாட்ட முற்பட்டன. இதன் விளைவாக, 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவிலும் ஈழத்திலும் பிரித்தானியர் கால்பதித்தனர். ஒல்லாந்தரின் ஆட்சியை ஈழத்திலிருந்து அகற்றுவதற்குக் கண்டி மன்னன் பிரித்தானியரின் உதவியை நாடினார். இதனைத் தமது நலனுக்காகப் பயன்படுத்திக்கொண்ட பிரித்தானியர், 1795இல் திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களையும் 1798இல் கொழும்பையும் ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றினர். அவர்களால் வன்னி அரசையும் கண்டி அரசையும் கைப்பற்ற முடியாமல் இருந்தது. எனினும், அவர்கள் 1802இல் ஈழத்தைத் தமது காலனித்துவ நாடாக அறிவித்தனர்.

வன்னியின் கடைசி மன்னனாக இருந்த பண்டாரவன்னியன் பிரித்தானியரை எதிர்த்துப் போரிட்டதுடன் கண்டித் தமிழ் மன்னனாகிய கண்ணுச்சாமியுடனும் இணைந்து செயற்பட்டார். ஈழம் முழுவதையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கப் போராடிய பிரித்தானியர், இறுதியில் சூழ்ச்சிகள் பல செய்து 1811இல் வன்னியையும் 1815இல் கண்டியையும் கைப்பற்றினர்.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் ஈழத்தமிழரின் அரசியல், பொருண்மிய, குமுக வரலாற்றில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. ஒல்லாந்தர் ஆட்சிக் காலம் வரை தமிழரின் மரபுவழி வாழ்விடமான தமிழர் தேசத்தில் தமிழர்களுக்கெனத் தனியான ஆட்சி அலகு காணப்பட்டது. ஆனால், பிரித்தானியர் ஈழம் முழுவதையும் ஆட்சிக்கு உட்படுத்திய பின் தமது நிர்வாகத்தினை இலகுபடுத்தும் நோக்கில் தனித்தனியாக இயங்கிய தமிழர் தேசத்தையும் சிங்கள தேசத்தையும் ஒன்றிணைத்து ஒற்றையாட்சிக்கு உட்படுத்தினர். மேலும், அவர்களுடைய ஆட்சியில் கொண்டுவரப்பட்ட அரசியல் சீர்திருத்தங்களால், ஈழம் தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. இதனால், தமிழர் தேசமும் இரு மாகாணங்களானது.

அத்துடன், இச்சீர்திருத்தங்கள் தனிச்சிங்கள அமைச்சர்களைக் கொண்ட இனவாத அரசு ஒன்று உருவாவதற்கும், தமிழர்களின் உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்படுவதற்கும் தமிழின அழிப்பு நடைபெறுவதற்கும் வழிவகுத்தன. தமிழர்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகளும் இன அழிப்புகளும் தமிழர்கள் தமது மரபுவழி வாழிடங்களை விட்டு இடம்பெயர்வதற்கும் தாயகத்திலிருந்து வெளியேறி வேறு நாடுகளுக்குப் புலம்பெயர்வதற்கும் ஏதுக்களாக அமைந்தன.

**சொற்கள்**

அடக்குமுறைகள் | இன அழிப்பு | ஒற்றையாட்சி | காலனித்துவநாடு | கைப்பற்றுதல்
சீர்திருத்தங்கள் | தமிழரசு | தமிழர் தேசம் | புலப்பெயர்வு | மென்போக்கு | வல்லரசு | வழக்காறுகள்

**வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஐரோப்பியர் கீழைத்தேய நாடுகளுக்கு வந்தமைக்கான நோக்கங்கள் எவை?
2. போர்த்துக்கேயரால் யாழ்ப்பாண மன்னர்களுடன் ஏன் நல்லுறவைத் தொடரமுடியவில்லை?
3. வன்னி அரசை யாரால் கைப்பற்றமுடியவில்லை?
4. ஈழத்தின் கரையோரப் பகுதிகள் எவ்வாறு ஒல்லாந்தரின் ஆளுகைக்கு உட்பட்டன?
5. ஒல்லாந்தர் ஆட்சிக்காலம்வரை தமிழர் தேசத்தில் எவ்வாறான ஆட்சி அலகு காணப்பட்டது?
6. பிரித்தானியரால் கொண்டு வரப்பட்ட ஒற்றையாட்சி முறை என்பது யாது?
7. ஈழத்தில் பிரித்தானியரால் கொண்டுவரப்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் தமிழர் வாழ்வில் ஏற்படுத்திய விளைவுகள் நான்கு எழுதுக.